**யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூன்- 2015
## Term Examination, June - 2015

| தரம் :- 13 (2015) | இந்து நாகரிகம் - I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

- **அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

1) வேதகாலக் கவிகளைப் பற்றிய விபரங்களைக் கூறும் நூல்
(1) சம்வாத சூக்தம் (2) ஆக்யான சூக்தங்கள் (3) அநுக்கிரமணி
(4) சுபர்ணா சூக்தம் (5) பிரைஷ சூக்தம் (………..)

2) கல்வெட்டுக்களிலுள்ள 'ஸ்வஸ்தி ஸ்ரீ' என்பது குறிக்கும் பொருள்
(1) கீர்த்தி உண்டாகுக. (2) ஆனந்தம் பெருகுக. (3) நீடூழி வாழ்க
(4) இன்பம் பொங்குக. (5) மங்களம் உண்டாகுக. (………..)

3) 'இலங்கையில் இந்து கலாச்சாரம்' என்ற நூலை எழுதியவர்
(1) ஏ.எல்.பசாம் (2) பேராசிரியர் சி.பத்மநாதன் (3) ந.க.மங்களமுருகேசன்
(4) கே.கே.பிள்ளை (5) பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை (………..)

4) வேத இலக்கிய மரபுகளும், அதனைச் சார்ந்த சமய சாத்திரங்களும் இயற்றப்பட்ட காலமாகக் கருதப்படுவது
(1) கி.மு. 1600 - கி.மு. 820 (2) கி.மு. 1400 - கி.மு. 700
(3) கி.மு. 1700 - கி.மு. 820 (4) கி.மு. 1500 - கி.மு. 800
(5) கி.மு. 1800 - கி.மு. 900 (………..)

5) சிந்துவெளிப் பிரதேசத்தில் துளைகளை உடையதாகக் காணப்பட்ட ஊதுகுழல் வாசிக்கும் நிலையில் இருந்ததாகக் குறிப்பிடும் அறிஞர்
(1) அறிஞர் மார்கே (2) சேர் ஜோன் மார்ஷல் (3) அலெக்ஷாண்டர் கன்னிங்காம்
(4) பானர்ஜி (5) கே.என்.பூரி (………..)

6) வேள்விக் கிரியைகளுக்குரிய விதிகளைக் கூறும் இலக்கியம்
(1) சங்கிதை (2) பிராமணம் (3) உபநிடதம்
(4) இராமாயணம் (5) மகாபாரதம் (………..)

7) பிற்காலத்தில் வலுப்பெற்ற நால்வகை வருணக் கட்டமைப்பின் தொடக்கத்தைக் கொண்டுள்ள இருக்குவேதப் பாடல் தொகுதி
(1) நாஸதீயசூக்தம் (2) ஜம சூக்தம் (3) புருஷ சூக்தம்
(4) வருண சூக்தம் (5) பிரம்மச்சரிய சூக்தம் (………..)

8) சிரௌதம், சுபதந்திரம் எனச் சிறப்பிக்கப்படும் இலக்கியம்
(1) சங்கிதைகள் (2) பிராமணம் (3) வேதம்
(4) ஆகமம் (5) உபநிடதம் (………..)

9) சாக்த ஆகமங்களில் ஒன்றாகக் கருதப்படுவது

(1) காமிகம் (2) வைகாசனம் (3) குமாரதந்திரம்

(4) ஈஸ்வரசங்கிதை (5) மகாநிருவாண தந்திரம் (………..)

10) மகதப் பேரரசனின் ஆதிக்கத்தில் முதன்மையானவர்களாக விளங்கியவர்கள்

(1) மௌரியர் (2) குப்தர் (3) நந்தர்கள்

(4) குசானர் (5) சாதவாகனர் (………..)

11) பஞ்சயதன கோயில் அமைப்பு முறையானது இடம்பெற்ற காலமாகக் கருதப்படுவது

(1) மௌரியர் காலம் (2) குப்தர் காலம் (3) குஷாணர் காலம்

(4) பல்லவர் காலம் (5) சோழர்காலம் (………..)

12) மகாபாரதத்தில் அரசர் உபாயம், மக்கள் ஒழுக்கம் ஆகியன பற்றிக் கூறும் பகுதி

(1) சாந்தி பருவம் (2) ஆதிபருவம் (3) வீஷ்ம பருவம்

(4) துரோண பருவம் (5) மோட்ச பருவம் (………..)

13) இந்து தர்ம நெறிக்கும் மானிட விழுமியங்களுக்கும் அடிப்படையாக அமையும் இலக்கியம்

(1) வேதம் (2) ஆகமம் (3) புராணம்

(4) மகாபாரதம் (5) இராமாயணம் (………..)

14) இந்துக்களின் தனிமனித சமூகநிலையிலமைந்த வாழ்க்கை முறைகளைக் கூறுவது

(1) ஆசாரகாண்டம் (2) வியபகாரகாண்டம் (3) பிராயச்சித்த காண்டம்

(4) உத்தரகாண்டம் (5) பாலகாண்டம் (………..)

15) நீதிபதி அநீதி இழைத்தவராகவோ, கையூட்டுப் பெற்றவராகவோ காணப்படின் அவரது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட வேண்டும் என்று கூறும் ஸ்மிருதி

(1) மனுஸ்மிருதி (2) போதாயனஸ்மிருதி (3) நாரதஸ்மிருதி

(4) விஸ்ணுஸ்மிருதி (5) பிரகஸ்பதிஸ்மிருதி (………..)

16) பிராமணிய வழிபாட்டையும் நாட்டார் வழிபாட்டையும் இணைத்துக் கூறும் நூல்

(1) பரிபாடல் (2) கலித்தொகை (3) திருமுருகாற்றுப்படை

(4) திருக்குறள் (5) கலித்தொகை (………..)

17) ஷேத்திர வெண்பா பாடியவர்

(1) ஐயடிகள் காடவர்கோன் (2) 1ம் சிம்மவர்மன் (3) சிம்மவர்மன்

(4) மகேந்திரவர்மன் (5) இராஜசிம்மன் (………..)

18) வித்யாவிநீதன் எனும் விருதுப் பெயர் கொண்ட மன்னன்

(1) மகேந்திரவர்மன் (2) பரமேசுவரவர்மன் (3) இராசசிம்மன்

(4) நரசிம்மவர்மன் (5) நந்திவர்மன் (………..)

19) மங்களாசனம் என்ற பெயர் திவ்ய தேசங்களின் உருவாக்கத்திற்கு அடித்தளமிட்டவர்கள்

(1) நாயன்மார்கள் (2) மௌரியர்கள் (3) பல்லவர்கள்

(4) ஆழ்வார்கள் (5) சோழர்கள் (………..)

20) ஆலய பரிபாலனத்தின் பொருட்டும், இறைவனை மகிழ்விக்கும் பொருட்டு நடனமாடவும் நியமிக்கப்பட்டவர்கள்

(1) ஓதுவார் (2) பிடாரர்கள் (3) தலைக்கோலிகள்

(4) பாணர்கள் (5) பாடகர்கள் (………..)

21) விஜயநகர அரசர்களில் தமிழ்நாட்டை ஆண்டவர்கள்
(1) ஈசான பண்டிதர் (2) சர்வசிவ பண்டிதர் (3) பேரரசர்கள்
(4) மகாமண்டல ஈஸ்வரன் (5) மண்டலிதர் (………..)

22) 'ஆமுக்தமால்யதா' என்னும் ஆண்டாள் கதையை இயற்றியவர்
(1) அச்சுதராயர் (2) கிருஷ்ணதேவராயர் (3) சானாதிம்மர்
(4) வித்தியாரண்யர் (5) கரிகரர் (………..)

23) விஜயநகர அரசு வளர்ச்சி பெறத் துணையாக நின்ற அரசவைத் தலைவர்
(1) வித்தியாரண்யர் (2) கரிகரர் (3) புக்கன்
(4) அச்சுதராயர் (5) சாருவநரசிம்மன் (………..)

24) இந்தியாவில் ஐரோப்பியர் ஆதிக்கம் கூடுதலான பாதிப்பை ஏற்படுத்திய பிரதேசங்களாக விளங்கியவை
(1) தமிழ்நாடு, சேலம் (2) கேரளம், கன்னடம் (3) வங்காளம், குஜராத்
(4) காஞ்சி, காசி (5) பஞ்சாப், உத்தரப்பிரதேசம் (………..)

25) விஷ்ணுவுக்குரிய ஆகமங்களாக குறிப்பிடப்படுபவை
(1) காரணம், காமிகம் (2) சிந்தியம், அஜிதம் (3) குமாரதந்திரம், குமாரசம்பவம்
(4) பாஞ்சராத்திரம், வைகாசனம் (5) தந்திரங்கள், சங்கிதைகள் (………..)

26) மனம், வாக்கு என்பவற்றிற்கும் அவற்றைக் கடந்த நிலைக்கும் உரியவர் என்பதனால் விநாயகருக்கு வழங்கும் பெயர்
(1) பிள்ளையார் (2) லம்போதரர் (3) கணபதி
(4) கணேசன் (5) ஆனைமுகன் (………..)

27) 'கரகம் கவிழ்த்த காவிரிப்பாவை' என விநாயகரைப் பற்றிக் குறிப்பிடும் இலக்கியம்
(1) திருக்குறள் (2) மணிமேகலை (3) சிலப்பதிகாரம்
(4) மகாபாரதம் (5) இராமாயணம் (………..)

28) திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலையைப் பாடியவர்
(1) நம்பியாண்டார்நம்பி (2) காரக்காலம்மையார் (3) சுந்தரமூர்த்திநாயனார்
(4) சேரமான்பெருமாள் நாயனார் (5) நக்கீரர் (………..)

29) மகேந்திரவர்மனின் மதமாற்றம் பற்றிக் கூறும்
(1) குடுமியாமலைக் கல்வெட்டு (2) உத்தரமேரூர்சாசனம்
(3) மண்டகப்பட்டு குகைக்கோயில் சாசனம் (4) கூரம்செப்பேடு
(5) திருச்சிராப்பள்ளிக் கல்வெட்டு (………..)

30) பக்தி இயக்கத்தில் ஆலய வழிபாட்டில் முதன்மையான இடத்தைப் பெறும் சரியைத் தொண்டின் மேன்மை பற்றி அப்பரின் பாடல்
(1) மந்திரமாவது நீறு….. (2) பாலுக்குப் பாலகன்…. (3) மூவர் புரங்கள் எரித்து……
(4) பித்தா பிறைசூடி……… (5) நிலைபெறுமா……… (………..)

31) ‘நீறு செவ்வே இடக் காணில் திருமால் அடியவரே………..’ எனத் தொடங்கும் பாடலின் திருமண் காப்பிடுதல் பற்றிப் பாடும் ஆழ்வார்

(1) பெரியாழ்வார் (2) ஆண்டாள் (3) குலசேகர ஆழ்வார்

(4) நம்மாழ்வார் (5) மதுரகவியாழ்வார் (………..)

32) வட இந்தியப் பக்தி இயக்கத்தின் முன்னோடியாகக் கருதப்படுபவர்

(1) இராமானந்தர் (2) கபீர்தாசர் (3) இராமதாசர்

(4) ஸ்ரீசைதன்யர் (5) துளசிதாசர் (………..)

33) ‘ஜயம் கொண்ட சாளமேக சதுர்வேதி மங்கலம்’ பற்றிக் கூறும் கல்வெட்டு

(1) பதவியாக் கல்வெட்டு (2) மிகிந்தலைக் கல்வெட்டு

(3) 2ம் பராக்கிரமபாகுவின் கல்வெட்டு (4) குருநாகல் கல்வெட்டு

(5) மெடிரிகிரியா கல்வெட்டு (………..)

34) அச்சியந்திர வருகையால் வெளியான முதல் பத்திரிகை

(1) விவேகானந்தன் (2) சிவதொண்டன் (3) சைவஉதயபானு

(4) சைவக்காவலன் (5) மெய்கண்டார்நெறி (………..)

35) ஈஸ்ற்காம் ஸ்ரீமுருகன் ஆலயம் அமைந்துள்ள நாடு

(1) கனடா (2) அவுஸ்ரேலியா (3) அமெரிக்கா

(4) ஜேர்மனி (5) இலண்டன் (………..)

- **மேல்வரும் பகுதிகளில் தரப்பட்டுள்ள சொற்களில் இவ்விரண்டு சொற்கள் குறிப்பிட்ட ஒரு விடயத்தோடு தொடர்புடையவை. அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் இல. 36 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான தொகுதியைத் தெரிவுசெய்து இதன் இலக்கத்தைக் குறிப்பிடுக.**

| A<br>ஸ்ரீபெரும்புதூர் | B<br>குணபூரணன் | C<br>கௌடபாதர் | D<br>சிவலிங்கம் | E<br>கேவலாவத்தை |
|---|---|---|---|---|
| F<br>ஆணவம் | G<br>ஆவுடையார் | H<br>இராமானுஜர் | I<br>மாண்டுக்கியகாரிகை | J<br>பிரமம் |

36) விசிட்டாத்துவைதத்துடன் தொடர்பானது

(1) BF (2) CI 3) DG (4) AH (5) EJ

(………..)

37) மத்துவர் வேதாந்தத்தோடு தொடர்பானது

(1) CG (2) BJ 3) AI (4) DH (5) EF

(………..)

38) அத்வைத சிந்தனையோடு தொடர்புபட்டது

(1) BH (2) AG 3) CI (4) DJ (5) EF

(………..)

39) சைவசித்தாந்தத்தோடு தொடர்பானது

(1) EF (2) AG 3) CI (4) DJ (5) BH

(………..)

40) சைவசித்தாந்தத்தில் சிவவழிபாடோடு சம்பந்தமானது

(1) EG (2) FA 3) CJ (4) HI (5) DG

(………..)

- **மேல்வரும் இல. 41 - 45 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள ஐந்து விடயங்களில் ஒன்று மற்றையவற்றோடு பொருந்தாதுள்ளது. அதன் இலக்கத்தைக் குறிப்பிடுக.**

41) (1) அஜந்தா (2) வாதாபி (3) எவ்லோரா
(4) ராஜபுத்திர (5) சித்தன்னாசல் (………..)

42) (1) கூத்தர் (2) ஓதுவார் (3) கோடியர்
(4) வைடியர் (5) விறலியர் (………..)

43) (1) மாரிமுத்தாப்பிள்ளை (2) முத்துத்தாண்டவர் (3) அருணாசலக்கவிராயர்
(4) எம்.எஸ்.சுப்புலட்சுமி (5) தியாகராஜ பாகவதர் (………..)

44) (1) அபிராமியந்தாதி (2) கந்தரலங்காரம் (3) கந்தரனுபூதி
(4) வேல்விருத்தம் (5) மயில்விருத்தம் (………..)

45) (1) சிவம் (2) சக்தி (3) சதாசிவம்
(4) நாதம் (5) விந்து (………..)

- பின்வரும் சொற்களை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் வினாவுக்குரிய விடையினைத் தெரிவுசெய்க.

| | | |
|---|---|---|
| A - தருமராஜரதம் | B - நடராஜமூர்த்தம் | C – வீணாதரண் |
| D - லதாவிருக்ஷிகம் | E - விஷ்ணுதர்மோத்திரம் | F - சூரியவர்மன் |

46) சிற்பக்கலைக் களஞ்சியம் எனப் போற்றப்படுவது
(1) B (2) C 3) D (4) E (5) A
(………..)

47) இந்துக் கலை வடிவங்கள் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று தொடர்பானவை எனக் கூறும் இலக்கியம்
(1) A (2) C 3) E (4) D (5) F
(………..)

48) அங்கோவாட் சிவாலயத்தை அமைத்த பெருமைக்குரியவன்
(1) D (2) C 3) B (4) F (5) A
(………..)

49) 'குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்' எனும் அப்பரின் தேவாரப்பாடல் உணர்த்தும் வடிவம்
(1) A (2) B 3) F (4) D (5) E
(………..)

50) காஞ்சி கைலாசநாதர் கோயிலில் காணப்படும் நடனவடிவம்
(1) B (2) C 3) D (4) E (5) F
(………..)